بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/02/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 9**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ - أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ -

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. சில போர்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. அப்துர் ரஹ்மான் பின் ஃகனம் (ரலி) அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ குரைஸாவை நோக்கி புறப்பட்ட போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரும் அன்னாரிடம் வந்து, மக்கள் தங்களை உலகின் அழகிய ஆடையில் கண்டால் அவர்களிடத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் விருப்பம் அதிகமாகும் என்று கோரிக்கை வைத்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் இறைவன் எனக்கு உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் உதாரணத்தை வானவர்களில் ஜிப்ராயீலைப் போன்று என்று கூறியுள்ளான். அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்தையும் ஜிப்ராயீலைக் கொண்டே அழித்தான். அவ்வாறே உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் உதாரணத்தை நபிமார்களில் ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களைப் போன்று என்று கூறியுள்ளான். رَبِّ لَا تَذَرْ عَلَى الْأَرْضِ مِنَ الْكٰفِرِيْنَ دَيَّارًا **என் இறைவா! நிராகரிப்பாளர்களில் எவரையும் பூமியில் உயிருடன் விட்டு விடாதே** என்று ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உதாரணம் மீக்காயீலைப் போன்றதாகும். அவர் பூமியிலுள்ள மக்களுக்காக பாவ மன்னிப்பு கோரும்போது அவருடைய உதாரணம் நபிமார்களில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்றதாகும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், فَمَنْ تَبِعَنِيْ فَإِنَّهٗ مِنِّيْ وَمَنْ عَصَانِيْ فَإِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ **என்னைப் பின்பற்றியவர் என்னைச் சார்ந்தவரே! எவர் எனக்கு கட்டுப்பட்டு நடக்கவில்லையோ, நிச்சயமாக நீ மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவாய்** என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இருவரும் எனக்காக ஏதேனும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டு விட்டால் நான் உங்களின் ஆலோசனைக்கெதிராக நடந்து கொள்ள மாட்டேன். ஆலோசனையில் உங்கள் இருவரின் நிலை பலவிதமாக உள்ளது. உதாரணமாக ஜிப்ராயீல், மீக்காயீல், நூஹ், இப்ராஹீம் அலைஹிமுஸ்ஸலாம் ஆகியோரைப் போன்றது.

ஓர் அறிவிப்பில் வருகிறது: பனூ குரைஸா போரில் ஹஸ்ரத் ஸஃது (ரலி) மற்றும் ஹஸ்ரத் கஅப் (ரலி) பின் அம்ர் மாஸ்னி ஆகியோரும் அம்புகளை எய்தவர்களில் இருந்தார்கள். இவர்கள் அதிகமான அளவில் அம்புகளை எய்தார்கள். இரவின் ஒரு பகுதி கழிந்ததும் இவர்கள் தத்தமது வசிப்பிடங்களை நோக்கி

திரும்பிவிட்டார்கள். அத்துடன் ஹஸ்ரத் சஃது பின் உபாதா (ரலி) அவர்களின் சார்பாக அனுப்பி வைக்கப்பட்ட பேரீச்சம்பழங்களை உண்டு நேரத்தை கழித்தனர். அப்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரும் பேரீச்சம்பழங்களை உண்டு கொண்டிருந்தனர். பேரீச்சம்பழங்கள் எவ்வளவு நல்ல உணவு என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் சஃது பின் முஆஸ் (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் அவர்களிடத்தில் வந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயிர் எந்த இறைவனின் கையில் உள்ளதோ அவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அழுகை குரலை விட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழும் குரலை நான் தனியாக அடையாளம் தெரிந்து கொண்டேன். அப்போது நான் எனது அறையில் இருந்தேன். அதாவது, இவ்விருவரும் அப்போது அழுது கொண்டிருந்தனர். رُحَمَآءُ بَيْنَهُمْ **அவர்கள் பரஸ்பரம் தங்களுக்கிடையே அளவற்ற நேசம் கொண்டிருந்தனர்** என்று அல்லாஹ் கூறியது போன்றே அவர்கள் இருந்தனர்.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கை குறித்து முந்தய குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. ஒரு கனவின் அடிப்படையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 1400 சஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவுடன் துல்கஃதா மாதம் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு உம்ரா செய்வதற்காக புறப்பட்டார்கள். மக்கத்து காஃபிர்கள் தம்மை மக்காவில் நுழைய விடாமல் தடுப்பதற்கு ஆயத்தங்கள் செய்து விட்டதாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. புகாரியின் ஓர் அறிவிப்பில் வருவது போன்று, அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் குறைஷ்களின் ஒப்பந்தம் நிகழ்ந்து நிபந்தனைகள் முடிவு செய்யப்பட்டு விட்டன. அப்போது சுஹைல் பின் அம்ர் அவர்களின் மகன் ஹஸ்ரத் அபூ ஜந்தல் (ரலி) அவர்கள் தம்மை பிணைத்திருந்த சங்கிலியுடன் வந்தடைந்தார்கள். மக்காவின் சார்பாக தூதுவராக வந்திருந்த சுஹைல் பின் அம்ர் அவர்கள் தம் மகனை திருப்பி ஒப்படைக்கும்படி கோரிக்கை வைத்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)அவர்கள் அவரை குறைஷியர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். இதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், தாங்கள் இறைவனுடைய உண்மையான தூதர் இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), நான் நிச்சயமாக இறைவனின் தூதரேயாவேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நாம் உண்மையிலும் நம் எதிரிகள் பொய்யிலும் இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), ஏனில்லை. நிச்சயமாக அவ்வாறே! என்று கூறினார்கள். அப்படியென்றால் நாம் இவ்வாறான இழிவான நிபந்தனைகளை ஏன் பொறுத்துக்கொள்ள வேண்டும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்), நான் இறைவனுடைய தூதர் ஆவேன். இறைவனின் நாட்டத்தை அறிவேன். அதற்கெதிராக நடந்து கொள்ள மாட்டேன். அவனே எனது உதவியாளன் ஆவான் என்று கூறினார்கள். நாம் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வோம் என்று தாங்கள் கூறவில்லையா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், நாம் இந்த வருடமே தவாஃப் செய்வோம் என்றும் நான் கூறினேனா? என்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், தாங்கள் அவ்வாறு கூறவில்லை! என்றார்கள். ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவ்வாறென்றால், பிறகு காத்திருங்கள்! அல்லாஹ் நாடினால் நீங்கள் நிச்சயமாக மக்காவில் நுழைந்து கஃபாவை தவாஃப் செய்வீர்கள்.

ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருப்தியடையவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்று அவர்களிடமும் இவ்வாறே கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அதே பதில்களைத்தான் கூறினார்கள். ஆனால் அத்துடன், பாருங்கள் உமரே! இறைத்தூதருடன் நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பிலிருந்து உமது கைகளை தளர விட்டு விட வேண்டாம். இறைவன் மீது ஆணையாக! இவர் உண்மையாளர் ஆவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அதன் பிறகு, இவ்வாறு நடந்து கொண்டதற்காக நான் பெரும் வருத்தம் கொண்டேன். பாவமன்னிப்பு கோரும் விதமாக இந்த பலவீனத்தின் கறை அகற்றப்படுவதற்காக பல உபரியான அமல்களை செய்தேன்.

இந்த ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் விபரங்கள் குறித்து எடுத்துரைத்தவாறு **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது ஸாஹிப் (ரலி) எழுதுகிறார்கள்:** உர்வா என்பவர் குறைஷியர்களுக்கு சாதகமாக அதிகமான நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வைக்கும் பொருட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, முஹம்மது (ஸல்) அவர்களே! இந்த போரில் குறைஷ் வெற்றி பெற்று விட்டால் இறைவன் மீது ஆணையாக! நான் உங்களைச் சுற்றி எவ்வாறான முகங்களைக் காண்கிறேன் என்றால் இவர்கள் அனைவரும் உங்களை விட்டு விடுவர் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உர்வாவின் இச்சொற்களைக் கேட்டு கடும் கோபம் வந்தது. இங்கிருந்து சென்று விடு! உமது லாத் சிலையை முத்தமிட்டுத் திரி! நாங்கள் இறைவனின் தூதரை விட்டு விடுவோமா என்ன? என்றார்கள். அதாவது, நீங்கள் சிலைகளுக்காக பொறுமையையும் உறுதிப்பாட்டையும் காட்டுகிறீர்கள். நாங்களோ இறைவன் மீது நம்பிக்கை கொண்டவார்களாக இருக்கிறோம். அவ்வாறு இருக்கும்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை விட்டு விட்டு ஓடி விடுவோமா என்ன! என்று கேட்டார்கள்.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையினுடைய ஒப்பந்தம் இரண்டு பிரதிகளாக ஆயத்தம் செய்யப்பட்டது. அதில் சாட்சியாளர்களாக முஸ்லிம்கள் சார்பில் கையொப்பமிட்டவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். ஹுதைபியா சமாதான உடன்படிக்கையை விட மிகப் பெரும் வெற்றி இஸ்லாத்தில் இல்லை என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்.

**பனூ ஃபுஸாராவை நோக்கி ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையெடுத்து சென்ற சம்பவம்.** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இப்படைக்கு அமீராக நியமித்திருந்தார்கள். **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த போரைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** இந்த போரில் முஷ்ரிக்களில் பலர் கொல்லப்பட்டனர்; பலர் கைது செய்யப்பட்டனர்.

நஜதை நோக்கி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையெடுத்து சென்ற சம்பவம். இதைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது; இந்த போர் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் ஷஃஅபான் மாதத்தில் நடந்தது. ஹஸ்ரத் சலமா பின் அக்வஃ அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள்; படையினருக்கு அவர்களை அமீராக நியமித்தார்கள்.

கைபர் போர் குறித்து இவ்வாறு குறிப்பு வருகிறது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஹர்ரம் மாதம் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டில் கைபரை நோக்கி படையெடுத்தார்கள். லாகூரிலிருது வெளியாகியுள்ள ஸய்யிதினா சித்தீக்கே அக்பர் (ரலி) எனும் நூலினுடைய ஆசிரியர் இவ்வாறு எழுதுகிறார்: ஒரு கோட்டை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கைகளில் வெற்றி கொள்ளப்பட்டது. இரண்டாவது கோட்டை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கைகளில் வெற்றி கொள்ளப்பட்டது. மூன்றாவது கோட்டையான கமூஸ் ஐ ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வெற்றி கொண்டார்கள். கைபர் போரின் வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதர உறவினர்களுக்கு மட்டுமின்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் நூறு வஸ்க் அளவிலான தானியங்களையும் பேரீச்சம் பழங்களையும் வழங்கினார்கள்.

குறைஷுடைய நட்புக் கோத்திரமான பனூ பக்ர் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கெதிராக நடந்து கொண்டவாறு முஸ்லிம்களின் நட்புக் கோத்திரமான பனூ குஸாஆவின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். ஆயுதங்கள் மற்றும் பயண விலங்குகளைக் கொண்டு பனூ பக்ருக்கு குறைஷ் உதவி செய்தது. ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை மதிக்கவில்லை. அப்போது அபூ ஸுஃப்யான் அவர்கள் மதீனாவுக்கு வந்தார். ஹுதைபியா சமாதான உடன்படிக்கையை புதுபிக்க விரும்பினார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார். ஆனால், அன்னார் (ஸல்) அவர்கள் அவருடைய எந்த விஷயத்திற்கும் பதிலளிக்கவில்லை. பிறகு அபூ ஸுஃப்யான் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் சென்றார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எடுத்துக் கூறுமாறு அவ்விருவரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் அவ்விருவரும் மறுத்து விட்டதனால் அவர் தோல்வியடைந்து திரும்பினார்.

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில் ரமலான் மாதத்தில் மக்கா வெற்றி நிகழ்ந்தது. இதை மாபெரும் வெற்றி என்றும் கூறுகிறார்கள். தபரி வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளதாவது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பயணத்திற்கு ஆயத்தமாகும்படி மக்களிடம் கூறினார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் தம் வீட்டாரிடம் தம் பயண சாமான்களை ஆயத்தம் செய்யும்படியும் கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றபோது அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பொருட்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சீரத் ஹல்பியாவில் எழுதப்பட்டிருப்பது போன்று, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதைக் குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோதே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அங்கு வந்து விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, குறைஷை எதிர்கொள்ள செல்வதாக கூறினார்கள். குறைஷ்களுக்கும் நமக்குமிடையே தற்போது சமாதான உடன்படிக்கையும் அதற்கான காலக்கெடுவும் எஞ்சியுள்ளதே! என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டபோது அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் துரோகம் செய்து விட்டனர். உடன்படிக்கையை முறித்து விட்டனர். ஆகவே படையெடுத்து செல்லும் விஷயத்தை தற்போது இரகசியமாகவே வைத்திருங்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப பல்லாயிரம் நபர்களைக் கொண்ட படை ஆயத்தமாகி விட்டது. அன்னார் போருக்கு புறப்பட்டபோது, என்

இறைவா! நீ மக்காவாசிகளின் காதுகளை செவிடாக்கிவிடுவாயாக. அவர்களின் ஒற்றர்களை குருடாக்கி விடுவாயாக. அவர்கள் எங்களை பார்த்து விடவும் கூடாது; அவர்களின் காதுகள் வரை எங்களின் எந்தவொரு செய்தியும் சென்றடையவும் கூடாது என நான் உன்னிடம் துஆ செய்கிறேன் என்று கூறினார்கள். மதீனாவில் எவ்வளவோ நயவஞ்சகர்கள் இருந்தார்கள். ஆனால் பத்தாயிரம் நபர்களைக் கொண்ட படை புறப்பட்டது. ஆனால் இதைக் குறித்து மக்காவாசிகளுக்கு எந்த தகவலும் சென்றடையவில்லை. இது அல்லாஹ்வின் வேலையாக இருந்தது.

தபகாத் இப்னு சஃதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்களின் இப்படை இஷா நேரத்தில் மக்காவிலிருந்து மதீனாவுக்கு செல்லும் வழியில் 25 கி.மீ தொலைவில் உள்ள மர்ரு ஸஹ்ரான் எனும் இடத்தை அடைந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க சஹாபிகள் பத்தாயிரம் இடங்களில் நெருப்பு மூட்டினர். குறைஷ்களுக்கு தகவல் கிடைத்தபோது அவர்கள் அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப், ஹக்கீம் பின் ஹிஸாம் மற்றும் புதைல் பின் வர்கா ஆகியோரை அனுப்பி வைத்து முஹம்மது (ஸல்) அவர்களிடம் எங்களுக்காக சமாதானத்தை கேளுங்கள் என்றார்கள். அவர்கள் இந்த படையை கண்டபோது கடும் அச்சமுற்றனர். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூ ஸுஃப்யான் அவர்களின் குரலை கேட்ட போது, அபூ ஹன்ஸல்! என்று அழைத்தார்கள் (இது அபூ ஸுஃப்யான் அவர்களின் பட்டப் பெயராகும்). அதற்கு அபூ ஸுஃப்யான் அவர்கள், ஆம்! நான்தான் வந்துள்ளேன் என்றார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அவருக்கு அடைக்கலம் கொடுத்து அவருடன் வந்த இரு தோழர்களுடன் அவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் அழைத்துச் சென்றார்கள். அந்த மூவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த நற்குறிப்பு தொடரும். இன்ஷா அல்லாஹ்! வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)